நல்லூர் ... யாழ்ப்பாணம்

Registered as a News Paper · பக்கங்கள் 04 · விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM · Peoples Daily · மக்கள் தினசரி

நாதம்:- 03 · திருவள்ளுவர் ஆண்டு 2023 · ஆனி 06 · (20 - 06 - 1992) · சனிக்கிழமை · ஓசை: 123

## மாணவர் பிரச்சினை கூற மாவட்ட ரீதியில் மாநாடு

பாடசாலையில் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை எடுத்துக்கூற அவர்களுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது இதன்மூலம் அரசாங்கப் பாடசாலைகளில் கல்வி கற்கும் சுமார் 40 இலட்சம் மாணவர்கள் தமது குறைகளை எடுத்துக்கூறமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதற்காக வகுப்புத் தலைவர்கள் மாநாடு மாவட்டரீதியில் நடத்தப்படும். மாணவர்கள் தம் குறைகளை இம்மாநாட்டில் கூறலாம். இம்மாநாடுகள் இன்னும் இரண்டொரு மாதங்களில் ஆரம்பமாகும். (4 ஆம் பக்கம் பார்க்க)

# வட-கிழக்கிற்கு தனித்தனி மாகாணக் குழு; தெரிவுக்குழுவின் புதிய தீர்வுத் திட்டம்

## தமிழ்க் குழுக்களின் பரிசீலனையில்

(கொழும்பு)

பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினை தீர்விற்கான புதிய தீர்வுத் திட்டமொன்றைக் கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களிடம் பரிசீலனைக்கென சமர்ப்பித்துள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு தனித்தனி மாகாணக்குழுக்கள் அமைக்கப்படும் எனவும், இக்குழுக்களின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி இம் மாகாணங்களின் கூட்டணி குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பர் எனவும் இத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக பி. பி சி. நேற்றிரவு அறிவித்தது.

குறிப்பிட்ட கூட்டணி குழு எப்படிச் செயற்படும் என்றோ அல்லது இக்குழுவிற்கு வழங்கப்படவுள்ள அதிகாரங்கள் என்ன என்பது குறித்தோ விபரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இத் திட்டத்தினை முன் வைப்பதன் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படவில்லை என்பதைக் கொண்டு சிங்கள தீவிரவாதிகளையும்,

மேற்படி கூட்டணிக் குழுவின் கீழ் தமிழர்களுக்கு தன்னாட்சி வழங்கப்பட்டிருப்பதாக தமிழ்க் குழுக்களையும் திருப்திப்படுத்துவதற்கு பாராளுமன்ற தெரிவுக் குழு முயற்சிக்கிறது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

உப்பூரல் இராணுவம

## பதுங்கியிருந்து தாக்கியதில் ஒரு தமிழ் மகன் பலி

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டம் நல்லூரில் பொதுமக்கள் மீது சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் ஒருவர் கொல்லப்பட்டார்.

கடந்த 15ஆம் திகதியன்று நல்லூரில் இருந்து இலங்கைத் துறைமுகத் துவாரத்திற்குச் சென்றபோது மக்கள்மீது உப்பூரல் இராணுவமுகாம் இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கினர்.

இத் தாக்குதலால் சிவலிங்கம் வனம் (வயது 30 உப்பூரல்) என்பவர் பலியானார்.

புகைப்படத்தில் கையொப்பமிட

## ராணுவமுகாம் சென்ற 2தமிழ் பொதுமக்கள் கைது

(திருகோணமலை)

மூதூர் ஜி பி.எஸ் இராணுவ முகாமிற்கு அடையாள புகைப்படத்தில் கையொப்பமிடச் சென்ற இரு பொதுமக்களை சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்

நேற்று முன்தினம் இம்முகாமிற்குச் சென்ற அருளாலந்தம் ரவீந்திரமூர்த்தி (வயது 28- கடற்கரைச்சேனை), மாரிமுத்து வெற்றிவேல் (வயது 35- கடற்கரைச்சேனை) ஆகியோரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

## பாலையடி முகாம் ராணுவம் வயோதிபரை கொன்றது

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு பாலையடி முகாம் இராணுவத்தினர் ஒரு இராணுவத்தினர் கந்தப்பர் வீரகுட்டி [வயது 70-38 ஆர் கிராமம்] என்னும் வயோதி

கண்மூடித்தனமான தாக்குதலை நிறுத்தக்கோரி

## அரசிடம் வேண்டுகோள்விடுவது பயன் ஏதும் அற்ற செயல்

யாழ், அரச அதிபர் தெரிவிப்பு

(அலுவலக நிருபர்)

மக்கள் குடியிருப்புகள், ஆலயங்கள், பாடசாலைகள் மீது கண்மூடித்தனமாக எறிகணைத் தாக்குதலை மேற்கொள்ள வேண்டாம் என அரசிற்கு வேண்டுகோள் விடுவது பயனற்றதாகி விட்டது என யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரி

## தேடப்படும் முன்னாள் ராணுவத்தினர்

(மொறட்டுவ)

பண்டாரகம அட்டுளுகமையில் இடம்பெற்ற ஆறரை லட்சம் ரூபா கொள்ளை தொடர்பாக இரண்டு முன்னாள் இராணுவத்தினர் தேடப்பட்டு வருகின்றனர்.

பண்டாரகமையிலுள்ள முஸ்லிம் ஒருவரின் வீட்டினுள் புகுந்து இரத்தினக்கல், தங்க நகைகள், பணம் என்பன கொள்ளை அடிக்கப்பட்டதாக பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## போர்க்கால அறிவிப்பு

தற்பொழுது ஏற்பட்டுள்ள போர்க்கால நிலைமைகள் அதன் விளைவுகள் தொடர்பாக மக்களுக்கு தெரியவேண்டிய கருத்துக்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவு யாழ் மாவட்ட செயலகம் வெளியிட்டுள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

### வீரவேங்கை மதிவண்ணன்

18-06-92 அன்று இடம்பெற்ற வெடிவிபத்தொன்றில் விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை மதிவண்ணன் (வேலாப்போடி ஜீவரெத்தினம் மண்டபத்தடி, 3 ஆம் குறிச்சி கன்னாய்குடா, மட்டுநகர்) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## அமைச்சர் ரணில் அச்சம்

(கொழும்பு)

வெளிநாட்டுப் படை ஒன்று வந்து விடுமோ என்ற அச்சத்துடன் அமைச்சர் ரணில் இருப்பதாக லங்கா தீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## சப்ரகமுவ மாகாணசபையில் தமிழில் பேச வசதியில்லை

## வயோதிபரை கொன்றது

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு பாலையடி முகாம் இராணுவத்தினர் ஒரு பொது மகனைச் சுட்டுக் கொன்றதுடன் ஒருவரைப் பிடித்து முகாம் கொண்டு சென்றுள்ளனர்.

கடந்த புதன்கிழமை பிற்பகல் 1-00 மணியளவில் 38 ஆம் கிராமத்திற்குச் சென்ற இந்த இராணுவத்தினர் கந்தப்பர் வீரகுட்டி [வயது 70-38 ஆம் கிராமம்] என்னும் வயோதிபரைச் சுட்டுக் கொன்றுள்ளனர். அத்துடன் மண்டுமுனை மோடி அருளானந்தம் [வயது 32 -38 ஆம் கிராமம்) என்பவரை பிடித்து முகாம் கொண்டு சென்றுள்ளனர்.

## கண்ணிவெடியில் சேதமானது

## பவள் கவச வாகனமாம்

### பீரங்கிஜீப் ஒன்றும் சேதம்

(கொழும்பு)

தெல்லிப்பழையில் கடந்த செவ்வாயன்று விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி சேதமடைந்த இராணுவ வாகனம், தென்னாபிரிக்காவிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட பவள் கவச வாகனம் எனக் கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெளியிடப்பட்டிருக்கும் இத்தகவலின் மேலும், இக்கண்ணிவெடியில் சிக்கி காயமடைந்த இராணுவத்தினர் அன்றையதினமே விமானமூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும், பின்புறம்நோக்கி செலுத்த முற்பட்டபோது கண்ண

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கூட்டுப்படை தலைமையக குண்டுவெடிப்பு

## ஆறு பேருக்கு எதிராக வழக்கு விசாரணை

(கொழும்பு)

கூட்டுப்படைத் தலைமையக குண்டுவெடிப்பு தொடர்பான வழக்கு ஆறு பேருக்கு எதிராக அடுத்தமாதம் 17 ஆம் திகதி 4 ஆம் இலக்க மேல நீதிமன்றத்தில் நீதிபதி லெஸ்லி அபயசேகரா முன்னிலையில் விசாரணை செய்யப்படும். அன்றையதினமே சந்தேக நபர்களிடம் குற்றப்பத்திரிகை கையளிக்கப்படும்.

நவலட்சுமி கதிரவேலு என்ற இந்திரா, சாந்தினி சிவலோகநாதன், சுகந்தன் விஜயகுமார், அருணாசலம் சுரேந்திரன் என்ற சஹி, இராசையா நடராஜா, சிதம்பரம் செல்லத்துரை என்ற பாரவ ஆகியோர் மீது மொத்தம் 7 குற்றச்சாட்டுகள் சுமத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## திருக்கோயில் அகதிகளாக 2,224 குடும்பங்கள்

திருக்கோயில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தற்போது 2 224 குடும்பங்கள் 18 இடங்களில் அகதிகளாக இருக்கின்றனர் என இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் திருக்கோயில் கிளையின் தலைவர் தலைமை பீடத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

மக்கள் குடியிருப்புகள், ஆலயங்கள், பாடசாலைகள் மீது

ணைத் தாக்குதலை மேற்கொள்ள வேண்டாம் என அர

பயனற்றதாகி விட்டது என யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ் குடாநாடு எங்கும் கண்மூடித்தனமாக சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதல்களை நிறுத்துமாறு அரசிற்குதகவல்கொடுக்கவில்லையா என எமது நிருபர் கேட்ட போதே அவா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மண்ணெய் அனுப்பிவைக்க அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்குத் தேவையான மண்ணெய் உடனடியாக கப்பல்மூலம்அனுப்பி வைக்குமாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் அத்தியாவசிய சேவைகள் நாயகத்திற்குஅவசரதந்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். இது தொடர்பாக அரசாங்க அதிபர் விளக்கமளிக்

(4ஆம் பக்கம் பார்க்க)

# பாடசாலை, ஆஸ்பத்திரியில் சிறிலங்கா இராணுவ முகாம்

### பழுகாமத்தில் மக்கள் அவதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பழுகாமம் கிராமத்தில் பாடசாலையிலும், வைத்தியசாலையிலும்இராணுவமுகாம் அமைக்கப்பட்டுள்ளதால் மக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலயத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் காவலரண்களை அமைத்துள்ளனர் இதனால் கிராமப்புறங்களிலிருந்தும், பழுகாமம் கிராமத்தில் இருந்தும்பாடசாலைசெல்லும் மாணவ மாணவிகள் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது இப்பாடசாலைக்குக் குறைந்தளவு மாணவர்களே செல்லுகின்றனர் அங்கு செல்லும் மாணவர்களும் இராணுவத்தின் கடும் சோதனைக்குட்படுத்தப் படுகின்றனர்.

இதேவேளை பழுகாமம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்கள் பொருள்களில் முகாம்அமைக்கும்ராணுவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பழுகாமம் கிராமத்தில் முகாமிட்டுள்ள சிறிலங்கா இராணுவ பொறுப்பதிகாரி பொதுமக்களிடமிருந்து பொருள்களை பெற்றுத் தருமாறு வற்புறுத்தி வருகிறார்.

பொறுப்பதிகாரியான பிசான் என்பவர் அங்குள்ள ஆறு கிராம சேவையாளர்களை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# போர் சூழ்நிலையில் பதுக்குவது பாரதூரமான சமூக குற்றம்

## கடும் தண்டனை விதிக்கப்படும் என்கிறார் காவல்துறை பொறுப்பாளர் திரு நடேசன்

(யாழ்ப்பாணம்)

போர்க்கால சூழ்நிலையில் பதுக்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது பாரதூரமான சமூகக் குற்றமாககருதப்படும். அந்த குற்றச் செயலில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும்.

இவ்வாறு தமிழீழ காவல் துறை பொறுப்பாளர் திரு. நடேசன் நேற்று பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

திரு. நடேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

'தற்போதைய நெருக்கடி நிலையைச்சாட்டாக வைத்து,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழில் பேச வசதியில்லை

(இரத்தினபுரி)

மாகாண சபைகள் ஆரம்பிக்கப்பட்டு ஐந்து வருடங்கள் ஆகிவிட்டன ஐந்து தமிழ்ப் பிரதிநிதிகள் அங்கத்தவர்கள் இருந்தும் அவர்கள் தமிழ்மொழியில் பேசுவதற்குரிய வசதிகள் செய்து தராதது வருந்தத்தக்க விடயமாகும்.

இவ்வாறு சப்ரகமுவமாகாண சபையின் எதிர்க்கட்சி அங்கத்தவர் ஏ. விலியம் மேற்படி சபையில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் இந்நாட்டில் இனப்பிரச்சினைக்கு தீர்வாகவே மாகாண சபை அமைப்புமுறைகொண்டு வரப்பட்டது.

1987 ஆம் ஆண்டு மாகாண சபைகள் சட்டமூலத்தின் [13-

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மண்ணெண்ணெய் பதுக்கல்;

## வியாபாரி பிடிபட்டார் நியாய விலையில் விற்பனை

போர்க்கால நெருக்கடி நிலையைச் சாதகமாகக் கொண்டு மண்ணெண்ணையைப் பதுக்கி வைத்துக் கொள்ளைலாபமடிக்கமுயன்ற நடைபாதை வியாபாரி ஒருவர் விடுதலைப் புலிகளின் கண்காணிப்புப் பிரிவினரிடம் வகையாக மாட்டிக்கொண்டார்.

நேற்று முன்தினம் யாழ். தட்டாதெருச் சந்தியில் இச் சம்பவம் இடம்பெற்றது

திடீர் சோதனை மேற்கொண்ட கண்காணிப்புப் பிரிவினர், சம்பந்தப்பட்ட வியாபாரியிடமிருந்து 25 பரல் மண்ணெண்ணையைக் கைப்பற்றியதுடன், நேற்று அந்த இடத்திலேயே வைத்து பாவனையாளர்களுக்கு விற்பனை செய்தனர்.

## வர்த்தக சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

போர்கால சூழலைப் பயன்படுத்தி அத்தியாவசியப் பொருள்களை பதுக்கி வைப்பதையும், அதிக அளவில் விலைகளைக் கூட்டி விற்பனை செய்வதையும், நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது. ஒரு சில வர்த்தகர்கள் செய்யும் இத்தகைய தவறான செயல்களால் முழு வர்த்தகர்களுக்கும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இடம் பெயர்ந்தோர் மீண்டும் திரும்புகின்றனர்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா முப்படைகளும் நடாத்திய கண்மூடித்தனமான தாக்குதல்களுக்கு அஞ்சி தமது சொந்த இடங்களை விட்டு அகதிகளாக வெளியேறிய மக்கள் தற்போது படிப்படியாக தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது

மாதகல், இளவாலை, வினான், அளவெட்டிப் பகுதிகளிலிருந்து வெளியேறி பாடசாலைகள், ஆலயங்கள், உறவினர் வீடுகளில் தங்கியிருந்தோரே நேற்றையதினம்தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்றனர் பெரும்பாலானோர் தமது அசையும் சொத்துக்களைப் பாதுகாப்பான இடங்களில் வைத்து விட்டு தாம் மட்டும் வீடுகளில் தங்கியுள்ளனர். (ச)

# வரி விளம்பரம்

**விற்பனைக்கு உண்டு**

கறுத்த கைலையின் 3கிழமை பேட்டுக் கோழிக் குஞ்சுகளும், 14 போத்தல் கறக்கக் கூடிய ஜே.சி இன பசு மாடும் விற்பனைக்கு உண்டு. ஆர். எஸ். கே.பா ம் முருகபதி உடுவில் சுன்னாகம்.
(2678)

**விற்பனைக்கு**

இரும்புவேலைத்தலத்திற்கு உபயோகமான ஆயுதங்கள், சிங்கர்தையல் மெஷின், லினோனியம், தமிழ்/ஆங்கிலம் தட்டச்சுக்கள் Bottle Coolets, Deep Freezer, Air Conditione வீட்டுப்பாவனைப் பொருட்கள் - ஜெயா ஒக்ஷன்மாட், டாஸ் கொம்ப்ளெக்ஸ், 163 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(2687)

**"மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்"**

மீரா வெளியீடு. சிதம்பர திருச்செந்திநாதன் எழுதிய இந்த நாவல்... துன்பங்களும் சோதனைகளும் தொடர்ந்து வந்தபோதும் தளராத மன உறுதியுடன் இந்த மண்ணை நேசித்து மானமுடன் தலை நிமிர்ந்து வாழமுனையும் ஒரு குடும்பத்தின் கதை. விற்பனையாகிறது.
(2691)

## 122வது நினைவு விழா

[யாழ்ப்பாணம்]

யாழ். கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய 122 வது நினைவு விழா வரும் 22 ஆம் திகதி கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பிரதமவிருந்தினராக இ ஜெயராஜ் அவர்களும் சிறப்பு விருந்தினராக அ. தங்கராசா, கி. பஞ்சலிங்கம் அவர்களும், கௌரவ விருந்தினராக அரியாலை விடுதலைப்புலிகள் பிரதேசப் பொறுப்பாளர் சீராளன் அவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். நிறுவுனர் நினைவுப் பேருரையை கு. குருநாதபிள்ளையும் நிகழ்த்தவுள்ளார்.

## புவனேஸ்வரனுக்கு கலாநிதிப் பட்டம்

(நமது நிருபர்)

யாழ். அரியாலையைச் சேர்ந்த மா. புவனேஸ்வரன் இங்கிலாந்திலுள்ள ஷெவீல்ட் பல்கலைக்கழகத்தில் கால நிலைத் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளார்.

## க. பொ. த. (சா.) பரீட்சை; 1992 டிசம்பர்

க. பொ. த (சா.) பரீட்சையில் தேற்ற உள்ள மாணவர்கள் கீழ்க்காணும் வரையறைக்குட்பட்ட எட்டுப் பாடங்களுக்கு தோற்றமுடியும், என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

1. சமயம்
2. மொழியும், இலக்கியமும் (சிங்களம் / தமிழ்)
3. ஆங்கில மொழி
4. விஞ்ஞானம்
5. கணிதம்
6. வரலாறும், சமூகக்கல்வியும்

} இப்பாடத் தொகுதியிலிருந்து ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களிற்கு தோற்றலாம்.

7. அழகியல்கல்வி
8. ஏனைய மொழிகள்
9. தொழில் நுட்பப் பாடங்கள்

} இப்பாடத்தொகுதிகள் மூன்றில் இரண்டைத் தெரிவு செய்யலாம். ஒரு தொகுதியில்ஒரு பாடத்தை மட்டும் தெரிவு செய்யவும்.

**பாடப் பட்டியலும் அவற்றிற்குரிய இலக்கங்களும்**

12 - சைவசமயம்
13 - இந்துசமயம்
14 - கிறிஸ்தவம் (றோ.க)
15 - கிறிஸ்தவம்
21 - சிங்களம் (மொழியும் இலக்கியமும்)
22 - தமிழ் (மொழியும் இலக்கியமும்)
31 - ஆங்கில மொழி
41 - விஞ்ஞானம்
42 - கணிதம்
43 - வரலாறும் சமூகக்கல்வியும்
51 - சித்திரம்
52 - நடனம் (சிங்களம்)
53 - நடனம் (பரதம்)
54 - சங்கீதம் (சிங்களம்)
55 - சங்கீதம் (கர்நாடகம்)
56 - சங்கீதம் (மேற்கத்திய)
62 - சமஸ்கிருதம்
64 - இரண்டாம் மொழி (சிங்களம்)
65 இரண்டாம் மொழி (தமிழ்)
66 - ஆங்கில இலக்கியம்
68 - பிரெஞ்சு
71 - மரவேலை
72 - மேசன் வேலை
73 - உலோக வேலை
74 - வானொலிப் பொறியியல்
75 - மோட்டார் பொறியியல்
82 - விவசாயம்
83 - நெசவு
84 - தையல் வேலை
85 - வீட்டுத்தோட்டம்
86 - மனைப் பொருளியல்
91 - வர்த்தகமும் கணக்கியலும்
92 - சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (சிங்களம்)
93 - சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்)
94 - சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்)

**க. பொ.த. (சா. த) பரீட்சை நிலையங்கள் அமைக்கப் பெறும் நகரங்களும் எண்களும்**

**யாழ்ப்பாண கல்வி மாவட்டம்**

| | |
|---|---|
| அனலதீவு | - 352 |
| ஊர்காவற்றுறை | - 353 |
| வேலணை | - 354 |
| புங்குடுதீவு | - 355 |
| நயினாதீவு | - 356 |
| நெடுந்தீவு | - 357 |
| மண்டைதீவு | - 358 |
| பண்டத்தரிப்பு | - 359 |
| வட்டுக்கோட்டை | - 360 |
| சுழிபுரம் | - 361 |
| காரைநகர் | - 362 |
| மல்லாகம் | - 363 |
| அளவெட்டி | - 364 |
| தெல்லிப்பழை | - 365 |
| காங்கேசன்துறை | - 366 |
| இளவாலை | - 367 |
| ஏழாலை | - 368 |
| சுன்னாகம் | - 369 |
| மானிப்பாய் | - 370 |
| சண்டிலிப்பாய் | - 371 |
| யாழ்ப்பாணம் | - 372 |
| நல்லூர் | - 373 |
| கொக்குவில் | - 374 |
| கோண்டாவில் | - 375 |
| வசாவிளான் | - 376 |
| அச்சுவேலி | - 377 |
| புத்தூர் | - 378 |
| [illegible] | - 379 |
| புலோலி | - 386 |
| செம்பியன்பற்று | - 387 |
| வறணி | - 388 |
| மீசாலை | - 389 |
| மிருசுவில் | - 390 |
| சாவகச்சேரி | - 391 |
| கைதடி | - 392 |

**கிளிநொச்சி கல்வி மாவட்டம்**

| | |
|---|---|
| கிளிநொச்சி | - 393 |
| பரந்தன் | - 394 |
| பூநகரி | - 395 |
| டனை | - 396 |


**மன்னார் கல்வி மாவட்டம்**

| | |
|---|---|
| எருக்கலம்பிட்டி | - 397 |
| மன்னார் | - 398 |
| வங்காலை | - 399 |
| தாராபுரம் | - 400 |
| முருங்கன் | - 401 |
| விடத்தல்தீவு | - 402 |

**வவுனியா கல்வி மாவட்டம்**

| | |
|---|---|
| வவுனியா | - 403 |
| செட்டிக்குளம் | - 403 ஏ |
| ஓமந்தை | - 404 |
| புளியங்குளம் | - 404 ஏ |
| [illegible] | - 405 |

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25-04 1944

மறைவு 01-07-1991

**அமரர் வி. ஏகாம்பரமூர்த்தி**

[அதிபர் யா/தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாசாலை]

திதி: 20.06.1992

எம் உள்ளத்தில் என்றும் ஒளிவீசும்
ஜோதியாய் நிலைத்து நிற்கும் அன்பு ஜோதியே!
உங்கள் உடல் எம்மை விட்டுப்
பிரிந்தாலும் உயிர் எம்முடனே இருக்கின்றது
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
பார் புகழும் ஏகாம்பரமூர்த்தி என்கின்ற
பேர் பரவும் செல்வனே பிரிந்து சென்றாய் -நீ சென்ற
ஓர் வருடம் பூர்த்தி கண்டோம்
உற்றார் துன்பம் ஆறவில்லை
நீர் வளரும் சிவனடிக் கீழ் நின் ஆன்மா வாழியவே.

மனைவி
தகப்பனார், மாமனார்
சகலன்மார், மைத்துனிமார்,
மக்கள்.

"இன்பலனை"
மூளாய்,
சுழிபுரம்.

(2696)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீர ஜனனம்: 09 — 04 — 1965



வீரச் சாவு: 20 — 06 — 1990

**வீரவேங்கை ரவி**

**(செந்தில்வேல் மணிமாறன்)**

தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

அப்பா, அம்மா, சகோதரிகள், மற்றும் உறவினர்கள்

தோப்புக்காடு,
காரைநகர்.

(2683)

1993ஆம் ஆண்டிற்கான

## வரவு செலவுத்திட்ட வேலைகள் ஆரம்பம்

(கொழும்பு)

1993 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கும் வேலை அடுத்தமாதம் ஆரம்பிக்கப் படவுள்ளது. தற்போது அமைச்சுக்கள் இலாகாக்கள் 1993ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்டங்களை தயாரித்து அனுப்புவதனை ஆரம்பித்துள்ளது.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 1964 - 10 - 11

உதிர்வு 1992 - 05 - 21

**அமிர்தலிங்கம் ருவேஸ்வரி**

கண்ணின் மணிபோல காத்திருந்தோம்
கண்ணே உன் பிரிவால் கலங்கிடுகின்றோம்
எண்ண மெல்லாம் உன்நினைவாய் ஏங்குகின்றோம்
மண்ணில் விதியிது என்று ஆர் எம்மைத்
தேற்றுவாரோ?

- குடும்பத்தினர்

நொச்சிக்குளம், ஓமந்தை.

(சி/ 4548)

## நினைவு கூருகின்றோம்...

**1992-06-20**

1987 ஆம் ஆண்டு பூசா முகாமில் வைத்து சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 4 தமிழ் இளைஞர்கள்,

உடுவிலில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட ஷெல் குண்டுவீச்சில் கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன், மற்றும் பலாலி முகாம் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஏழாலை, குரும்பசிட்டி, கட்டுவன் பகுதிகளைச் சேர்ந்த 3 தமிழர்கள்.

1989 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

வரதப்பா [வைத்திலிங்கம் கணேசலிங்கம் - தண்ணீரூற்று, முள்ளியவளை, முல்லைத்தீவு ]

1990 ஆம் ஆண்டு காரைநகரில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

ரவி (செந்தில்வேல் மணிமாறன் - தோப்புக்காடு, காரைநகர்.)

அம்பாறை அறுகம்பை முகாமில் வைத்து சிறிலங்காப் படையினரால் ரயர் போட்டு எரித்துக் கொல்லப்பட்ட பொத்துவில் வட்டுவெளியைச் சேர்ந்த

நிலைத் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளார்.

"இலங்கையின் காலநிலையில் ஏற்பட்டுவரும் மாறுதல்கள்" பற்றிய இவரது ஆய்வுக்கே இப்பட்டம் வழங்கப்பட்டுள்ளது. பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் சிறப்புப்பட்டதாரியான இவர் இதே பல்கலைக் கழகத்தில் தனது முதுமாணிப் பட்டத்தினை 1977இல் பெற்றார்.

பேராதனை, யாழ்ப்பாணம் பல்கலைக் கழகங்களின் விரிவுரையாளராகவும் இவர் பணி புரிந்துள்ளார்.

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்தமகோற்சவம் இன்று சனிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

வரும் 13ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 14ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என ஆலயபரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

## வெளிநாட்டு பத்திரிகையாளர் யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

அமெரிக்க, கனேடிய பத்திரிகையாளர்கள் தற்பொழுது யாழ் நகரில் நிலைமைகளை நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இப்பத்திரிகையாளர்கள் கொழும்பிலிருந்து வியாழன் யாழ் நகர் வந்துசேர்ந்தனர். இவர்கள் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெறும் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட இடங்களையும், அப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து அகதிகளாக்கப்பட்ட மக்களையும் மற்றும் குடாநாட்டின் பல்வேறு பிரச்சினைகளையும் நேரில் சென்று பார்த்து அவதானித்துச் செல்வர் எனத் தெரியவருகின்றது. (பா)

| | | | |
|---|---|---|---|
| அச்சுவேலி | - 377 | ஓமந்தை | - 404 |
| புத்தூர் | - 378 | புளியங்குளம் | - 404 ஏ |
| கோப்பாய் | - 379 | பாவற்குளம் | - 405 |
| நீர்வேலி | - 380 | | |
| உரும்பராய் | - 381 | | |
| உடுப்பிட்டி | - 382 | | |
| கரவெட்டி | - 383 | | |
| வல்வெட்டித்துறை | - 384 | | |
| பருத்தித்துறை | - 385 | | |

### முல்லைத்தீவு கல்வி மாவட்டம்

| | |
|---|---|
| முல்லைத்தீவு | - 406 |
| புதுக்குடியிருப்பு | - 407 |
| முள்ளியவளை | - 408 |

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் கவனத்திற்கு:-

அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் கற்றுக்கொண்டிராத எவரும் க. பொ. த (சா. தர)ப் பரீட்சைக்கு தனிப்பட்ட முறையில் விண்ணப்பிக்க முடியும். இப்பரீட்சைக்கான தனிப்பட்ட விண்ணப்பங்கள் 1992 யூன் 30 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பப் படிவங்கள் 33 X 20 செ மீ அளவு தாளில் தயாரிக்கப்படுதல் வேண்டும் 01 முதல் 11 வரையான அடைப்புக்கள் முதற்பக்கத்திலும் 12 முதல் 14 வரையான அடைப்புக்கள் மறுபக்கத்திலும் இடம் பெறத்தக்கதாக அமைதல் வேண்டும்

பூர்த்தி செய்த விண்ணப்பங்களைப் பதிவு அஞ்சலில் "பரீட்சை ஆணையாளர் தரவு நிரற்படுத்தல் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், மலே வீதி கொழும்பு - 02" எனும் முகவரிக்கு அனுப்பவும். விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் க. பொ த. (சா. தர) ப் பரீட்சை 1992 என்றும் அத்துடன் நகர எண்ணையும் குறிப்பிடவும்.

பரீட்சைக் கட்டணம்:-

பரீட்சைக்குரிய கட்டணத்தை அஞ்சல் / உப அஞ்சல் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டைப் பெற்று அதிலுள்ள தேவையான விபரங்களை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடுங்கள் (முடிந்தால் அதன் நிழற் பிரதியொன்றை கைவசம் வைத்துக்கொள்ளுங்கள்) பற்றுச்சீட்டின் இலக்கத்தையும் குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.

ஒரு பாடத்திற்கு ரூபா 15.00 இரண்டு பாடங்களுக்கு 20.00 ரூபா, மூன்று பாடங்களுக்கு '5.00 ரூபா, நான்கு பாடங்களுக்கு 30 00 ரூபா, ஐந்து பாடங்களுக்கு 40. 00 ரூபா, ஆறுமுதல் எட்டுப்பாடங்களுக்கு 50 00 ரூபா.


## ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கு
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4.00 6.00 மணி
காட்சிகளாக காண்பிக்கப்படுகிறது

புதிய வெளியீடு

## EAGLE HAS LANDED

(கழுகு தரையிறங்கி விட்டது)

[4569]


(2683)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் குமாரசூரியர் வாமதேவன்

(ஓய்வு பெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்)

தோற்றம்: 27-05-1925

மறைவு: 21-05 1992

குடும்பத்தின் ஒளி விளக்காய்
பண்பின் இருப்பிடமாய்
பாசத்தின் சிகரமாய்
திகழ்ந்த எம் தெய்வமே......
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம் ஐயா.

அன்பு மனைவி, மகள்

திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

(2657)

காப் படையினரால் ரயர் போட்டு எரித்துக் கொல்லப்பட்ட பொத்துவில் வட்டுவெளியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன் மற்றும் காரைதீவு இடம்பெயர்ந்தோர் முகாமினுள் நுழைந்த சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 6 தமிழர்கள்.

திருக்கோணமலை சீனன்குடாப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட 16 தமிழர்கள்

1991 ஆம் ஆண்டு மணலாற்றில் ரேசந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**லெப் சலீம்** [குமாரசிங்கம் ரவிச்சந்திரன் - சந்தை வீதி, கிரான், மட்டக்களப்பு ]

**2-ம் லெப். காமன்** [பொன்னையா காசிநாதன் - இன்னியடி, வாழைச்சேனை, மட்டக்களப்பு ]

**செல்வா** [பொன்னம்பலம் விஜயன் - மாங்கேணி, மட்டக்களப்பு ]

**கப்டன் சுபாஷ்** [அன்ரனி போல் ஹென்றி சில்வெஸ்ரர் ஆனந்தன் - சிப்பித்திடல், தம்பலகமம் திருக்கோணமலை ]

**அண்ணாத்துரை** [ஐயம்பிள்ளை தவராசா - தம்பலகமம், திருக்கோணமலை.]

[ சமர்க்களத்தில் முதன் முதலில் வீரச்சாவெய்திய துணைப்படை வீரர் ]

**லெப். பொன்னம்பலம்** [பொன்னம்பலம் - மணலாறு.]

**2-ம் லெப். சின்னப்பர் \ ரவிக்காந்த்** [கனகராசா பிரபானந்தன் - சசிக்குமார் வீதி, கோண்டாவில் மேற்கு.]

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**இந்திரன்** [அருளானந்தம் பரமானந்தம் - பாலமுனை, மண்டூர், மட்டக்களப்பு.]

தமிழீழக் கடற்பரப்பில் (திருக்கோணமலை தோப்பூர்) தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழ்க் கடற்றொழிலாளர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4577)

யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

சரியான செயலைச் செய்தாலும் தவறான காரணங்களுக்காகச் செய்யத் தூண்டும் துடிப்பே துரோகங்களில் கொடியது.

— டி.எஸ்.ஈலியட்

ஈழநாதம்

61, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 20-06-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 65

# தமிழ்க்குழுக்களின் காதல் இப்போ தொண்டா பக்கம்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கென கொழும்பிலுள்ள ஏழு தமிழ்க்குழுக்களும் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சித்தலைவரும், சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவருமான தொண்டமானுடன் இணைந்து செயற்பட முன்வந்துள்ளன. கடந்த வார இறுதியில் அமைச்சரைச் சந்தித்துப் பேசிய பின்னர் இந்த ஏழு தமிழ்க் குழுக்களும் இம் முடிவிற்கு வந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, ரெலோ குழுவின் பிரமுகர்களில் ஒருவரான சிறிகாந்தாவும் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக அமைச்சர் தொண்டமான் மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப் போவதாகவும், அது தமது கடமை எனவும் தெரிவித்துள்ளார்.

இத்தமிழ்க் குழுக்களுக்கு அமைச்சர் தொண்டமானிடத்தில் இவ்வாறு திடீரென நம்பிக்கையும் விசுவாசமும் பிறந்த தெவ்வாறு? அமைச்சர் தொண்டமான் விடுதலைப்புலிகளுடன் பேசாவிட்டால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது என்ற கருத்தினைக் கடந்த காலத்தில் தெளிவாக வெளியிட்டு வந்தவர். அத்தோடு, தீர்வுத் திட்டம் ஒன்றையும் முன்வைத்து பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டும் என்பதையும் வற்புறுத்தியவர்.

அமைச்சர் தொண்டமான் முன்வைத்த வடக்கு-கிழக்கு இணைந்த ஓர் சுயாட்சித் திட்டமும் புலிகளுடன் பேச வேண்டும் என்ற கோரிக்கையையும் எதிர்த்து பௌத்தப் பேரினவாத சக்திகள் போர்க்கொடி தூக்கின. ஐக்கிய தேசியகட்சியின் வழித் தோன்றல்களினாலும், சுதந்திரக் கட்சியின் வழித்தோன்றல்களினாலும் இரு பேரினவாத அமைப்புக்கள் அமைக்கப்பட்டன. இதனால், அரசாங்கம் குழப்பமடைந்து தொண்டமானின் தீர்வுத்திட்டத்தை கைவிட்டதோடு யாழ். விஜயத்தையும் தடுத்துவிட்டது.

இதேவேளை, அமைச்சர் தொண்டமானின் யோசனைக்கு

# இந்திய-பாக். சியாச்சின் போர்முனை; உலகிலேயே உயரமான யுத்தகளம்

உலகத்திலேயே மிக உயரத்தில் நடக்கும் சண்டை ஒன்றில் இந்தியாவும் பாகிஸ்தானும் கடந்த எட்டு வருடங்களாக ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன. இதற்கென இரு தரப்பு ராணுவமும் தினமும் சுமார் மூன்று கோடி ரூபாவினை செலவிடுகிறது.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையில் அமைந்துள்ள சியாச்சின் சிகரத்திலேயே இந்தப்போர் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

சர்வதேச வரைபடங்கள் சியாச்சினை பாகிஸ்தானின் பகுதியாக காட்ட ஆரம்பித்ததைத் தொடர்ந்து பாகிஸ்தான் சியாச்சின் பனிச்சரிவு உட்பட இந்திய பகுதியாகச் சொல்லப்படும் பகுதியின் 10,000 சதுர கிலோ மீட்டர் பரப்பைக் கேரி கட்டுப்பாட்டு எல்லையை ஒரு தரப்பாக தள்ளிப்போட்டது எச்சரிக்கை அடைந்த இந்தியா கட்டுப்பாட்டு எல்லை பனிச்சரிவுக்கு வடகிழக்காகத்தான் இருக்கவேண்டும் எனக்கூறி 1984 ஏப்ரல் 13இல் ''ஒப்பரேசன் மேக்தூத்'' என்ற பெயரில் அப்பகுதியில் போர் ஒன்றைத் தொடங்கியது

இப்பகுதியானது வெளிநாட்டவர்களால்தான் பிரபல்யம் அடைந்தது. சியாச்சின் பனிச்சரிவையும், அதன் சிகரங்களையும் அடைவதற்கு வெளிநாட்டைச்சேர்ந்த மலையேறுபவர்கள் பாகிஸ்தான் ஊடாகவே சென்றனர். ஏனெனில் பாகிஸ்தான் ஊடாக செல்வது சுலபமானதாக இருந்ததுடன் பாகிஸ்தானின் உதவியும் அவர்களுக்கு கிடைத்தது இதனால் இப்பிரதேசம் சர்வதேச வரைபடங்களில் பாகிஸ்தானின் பிரதேசமாக அடையாளம் கொடுக்கப்பட்டது. இதுவே இச்சண்டை ஆரம்பமாவதற்கு அடிப்படையாக அமைந்தது.

இப்பகுதியில் இந்தியா இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தை நிறுத்தியுள்ளது இராணுவத்திற்கு பின்பலமாக எதர்ப்பு பீரங்கிகள் உள்ளிட்ட பலவித ஆயுதங்கள் ஏவுகணைகள், 155 மி.மீ போபர்ஸ் ஹோவிட்சர் பீரங்கி உள்ளிட்ட பீரங்கி வகைகள் ஆகியவற்றை வைத்துள்ளது.

பாகிஸ்தானும் இதே தொகையான ராணுவத்துடன், மவுஷேர் ஸ்னைப்பர் ரைபிள்கள், கனரக இயந்திரத் துப்பாக்கிகள், டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள், ஒரே நேரத்தில் பல ராக்கெட்டுகளை செலுத்தும் லாஞ்சர்கள் மற்றும் பீரங்கிகளை நிறுத்தி வைத்துள்ளது.

இங்கே இருபகுதி ராணுவத்தினருக்கும் எல்லையைத் தாண்டி வரும் எதிரியை விட சியாச்சின் போர்முனை தான் பெரிய பிரச்சினையாகவும், சவாலாகவும் உள்ளது. இங்கு இறந்தவர்களில் 97 சதவீத ராணுவத்தினர், வானிலை மற்றும் நிலப்பரப்பின் தடைகளால்தான் உயிரிழந்துள்ளனர். மூன்று சதவீதத்தினர்தான் சண்டையில் எதிரிகளால் உயிரிழந்துள்ளனர். அத்துடன் ஒருமுறை இங்கு பணிபுரிந்தவர்கள் பதினைந்து வருடங்களுக்கு மீண்டும் இங்கு அனுப்பப்படமாட்டார்கள். அப்படியான சிக்கலான பிரதேசமாகவே இது உள்ளது சுருக்கமாக கூறப்போனால் அங்கு அனுப்பப்படுபவர்களில் பாதிப்பேருக்கு சாவு நிச்சயம்.

பனிச்சிரமான இப்பகுதியால் எந்தவித பிரயோசனமும் இல்லாத ஒரு நிலையில் கடந்த எட்டு வருடங்களாக இருநாடுகளுக்கும் இடையே போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உயிரிழப்புக்களோடு நிதி இழப்புக்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்தியாவிற்கு ஒவ்வொரு ஆண்டிலும், 1000 கோடி ரூபாய் செலவாகிறது. மிக பலவீனமான பாகிஸ்தான் பொருளாதாரத்தின் மீதான நிதிச்சுமையும் அதிகமாகத்தான் உள்ளது.

இதனை விட இங்குள்ள ராணுவத்தின் மனோநிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. தக்க காரணமில்லாமல் இருநாடுகளுமே ராணுவத்தை இப்பகுதிக்குள் குவித்துள்ளன.

இந்த வழமையான வேலைகள் நடக்க வேண்டுமானால் இரண்டு அம்சங்கள் துணைபுரிய வேண்டும். ஒன்று வானிலை மற்றது எதிரிகளின் தாக்குதல். வானிலை மோசமாக இருந்தால் இராணுவத்தினர் கூடாரம் அல்லது குடிசைக்குள் இருந்திடுவர்கள் சில மணிநேரத்தில் அவர்கள் அங்கு புதைந்து விடுவார்கள். இப்பனியை அப்புறப்படுத்துவதுதான் அவர்களுக்குரிய வேலையாக அப்போதிருக்கும். அப்போது அவர்களுக்கு வெளியுலகத் தொடர்பே இல்லாது போய்விடும்.

இவர்களுக்கு இங்குள்ள ஒரே தொடர்பு சாதனம் சீட்டா விமானமே ஆகும்.

''வெண்பனிக் காட்டின் நடுவே இருக்கும் எமக்கு 'சீட்டா' விமானத்தின் என்ஜின் சத்தமும், அது தரையிறங்கும் ஓசையும் இதமாக எமது காதில் ஒலிக்கும். குழந்தைக்குத் தாயின் இதயத்துடிப்பு இதமாக இருப்பது போலத்தான் இந்த உணர்வு'' என்று இங்கு சென்று திரும்பிய இராணுவ வீரர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விமானம் தான் இவர்களுக்கு உணவு, மண்ணெண்ணை, வெடி மருந்து, தபால்கள் எல்லாம் கொண்டு வரும். அத்துடன்நோய்வாய்ப்பட்டவர்களையும், இறந்தவர்களையும் கொண்டு போகும் வாகனமும் இதுதான்.

பனிச்சரிவில் உள்ள இராணுவத்தைப் போலவே இந்த விமானத்தின் என்ஜின்களும் தங்கள் சக்திக்கு மீறி பறக்கின்றன. இவை சாதாரணமாக 18,000 அடிவரைதான் பறக்க வேண்டும். ஆனால் இந்த உயரத்தையும் தாண்டி இங்கே பயணம் செய்கின்றன.

பனிச்சரிவுக்கு அனுப்புவதற்கு முன்னர் ராணுவத்தினருக்கு கடுமையான பயிற்சி அளிக்கப்படுகிறது இது சியாச்சின் போர்ப்பள்ளியிலே நடைபெறுகின்றது இப்பயிற்சியின் இறுதியாக இராணுவத்தினரை தாக்குப்பிடிக்கும்' சோதனைக்கு அனுப்புவர்கள் பத்துப்பேர் கொண்ட பிரிவுகளாக இரவு முழுவதும் பனிச்சரிவில் தங்கியிருக்க வேண்டும். பிழைத்திருப்பவர்கள் பரீட்சையில்சித்தி. திரும்பி வரவில்லையென்றால் அவர்களை தேட ஆட்கள் அனுப்பப்படும்.

இவ்வாறு பல சிரமங்களுக்கு மத்தியில் நீண்டகாலமாக, உயிரிழப்புக்களுடன், நிதிச்செலவுடன் தக்க காரணமின்றி இப் போர் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது.

1962 ஆம் ஆண்டு சீனாவால் கைப்பற்றப்பட்ட இந்தியப் பிரதேசம் மீட்கப்படாமல் இருக்கும் ஒரு நிலையில் கணவாய்கள் வழியே சியாச்சின் பனிச்சரிவுப்பகுதியில் பாகிஸ்தான் நுழைவதை தடுப்பதற்கும் 1963 இல் பாகிஸ்தான் சீனாவிற்கு கொடுத்த வுக்ஸ்காம் பள்ளத்தாக்கினுள் இருக்கும் பனிச்சரிவு இந்தியாவிற்கே சொந்தம் என்பதை நிலைநாட்டுவதற்கும் இந்தியாவால் இந்தப் போர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

—தொகுப்பு. -இந்தியா டுடே

## அணு ஆயுதங்களை

# மூன்றிலிரு பங்கினால் குறைக்க அமெரிக்கா ரஷ்யா இணக்கம்

[வாஷிங்டன்]

நீண்டதூரம் பாயும் அணு ஆயுதங்களை எதிர்பாராத முறையில் மேலும் தீவிரமாகக் குறைக்க அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷும், ரஷ்ய ஜனாதிபதி யெல்சினும் இணங்கியுள்ளனர்,

இவர்கள் தங்கள் முதல் நாள் சந்திப்பில் ஒவ்வொரு தரப்பும் மூவாயிரம் முதல்

ஜோர்ஜ் புஷ்

''இந்த இணக்கத்தினால் எங்களுக்கும் எங்கள் பிள்ளைகளுக்கும், பேரப் பிள்ளைகளுக்கும் ஏற்பட இருக்கும் அணு ஆயுத அச்சுறுத்தல் குறைகிறது'' எனஜேர்ஜ் புஷ் தனதறிக்கையில் கூறியுள்ளார்.

பொரிஸ் யெல்சின்

''அமெரிக்காவிற்கும் ரஷ்

நிறைவேற்றிய புது ஒப்பந்தம் பிரதிபலிக்கிறது'' என்று பொரிஸ் யெல்சின் தனதுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இதே நேரம் வியட்நாம் யுத்தத்தில் பிடிபட்ட அமெரிக்கக் கைதிகள் சோவியத்யூனியனுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும், அவர்கள் உயிரோடு இருக்கும் பட்சத்தில் கைதி

# மலையக இளைஞர் கைது; தொழிற்சங்கங்கள் உடந்தை

## டி. அய்யாத்துரை அறிக்கை

(பதுளை)

மலையகப் பகுதியில் தமிழ் இளைஞர்களை கைது செய்வதற்கு சில தொழிற்சங்கங்கள் உடந்தையாக செயல்பட்டு வருகின்றன. இது ஒரு வெட்கக் கேடான செயல் இது விஷயத்தில் தோட்டத்தொழிலாளர்கள் விழிப்பாக இருந்து தமது எதிர்கால சந்ததியினரை பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் டி. அய்யாத்துரை பத்திரிகைக்கு

தீர்த்துக் கொள்ளவும் பொய்யான தகவல்கள், பெட்டிசன்களை அனுப்பி மலையக இளைஞர்கள் கைது செய்ய துணை போகின்றன. இத்தகைய திட்டத்தினுடன் செயற்பட்டு வரும் சமூக விரோதிகளை தொழிற்சங்கங்களின் செயல்களை வன்மையாக கண்டிக்க கடமைப்பட்டுள்ளோம்.

இத்தகையதோர் கீழான நிலைப்பாடு மலையகத்தில் தோன்றியிருப்பது சமூக அழி

னைக்கு தனியாக சிங்கள பேரினவாத சக்திகளிடம் இருந்து மட்டும் எதிர்ப்பு கிளம்பவில்லை. கொழும்பில் தரித்து நிற்கின்ற தமிழ்க் குழுக்களிடமிருந்தும் எதிர்ப்பு கிளம்பின. அமைச்சர் தொண்டமான் முன்வைத்த வடக்கு - கிழக்கு இணைப்பைவிட, விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும் - அவர்களுடன் நடத்தும் பேச்சுக்கள் பிரச்சினையை தீர்க்கும் என்ற அமைச்சர் தொண்டமானின் யதார்த்த பூர்வமான நிலைப்பாடு தமிழ்க்குழுக்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தின. அமைச்சர் தொண்டமான் தம்மை ஓர் அரசியல் சக்தியாக மதிக்கவில்லை என்ற ஆத்திரத்தில் பலமான கண்டனங்களையும் தெரிவித்தன. அதாவது அமைச்சர் தொண்டமானின் திட்டத்திற்கு பௌத்த பேரினவாத சக்திகளிடம் இருந்து எழுந்த எதிர்ப்பிற்கு சற்றும் குறையாத நிலையில் தமிழ்க் குழுக்களும் எதிர்ப்பு தெரிவித்தன.

இந்நிலையில் திடீரெனத் தமிழ்க் குழுக்கள் அமைச்சர் தொண்டமானுடன் இணைந்து செயற்படுவதாகவும், அவருக்கு ஒத்துழைப்பு வழங்குவது தமது கடமை எனவும் 'பல்டி' அடித்திருப்பது அவர்களின் அரசியல் எதிர்கால நிச்சயமின்மையையே எடுத்துக் காட்டியுள்ளது சிங்கள பேரினவாதக் கட்சிகள் குறிப்பாக ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியானது வடக்கு கிழக்கு இணைப்பை ஏதோ ஒரு விதத்தில் - சழிக்க வேண்டியவற்றைக் கழித்தாவது - ஏற்றுக் கொள்ளும் என எதிர்பார்த்த தமிழ்க் குழுக்களுக்கு பெரும் ஏமாற்றமே கிடைத்தது அத்தோடு. அரசியல் எதிர்காலத்தையும் கேள்விக்குள்ளாக்கியது வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட முடியாத நிலையில், அரசியல் நடத்துவதே சாத்தியமாகாதென உணர்ந்த இக்குழுக்கள் ஓரளவேனும் மக்களின் பலமுள்ள அமைச்சர் தொண்டமானிடம் சரணடைந்துள்ளனபோல் தெரிகிறது.

ஆரம்ப காலம் முதலே யாரோ ஒருவரில் தங்கி நின்று அரசியல் நடத்த முற்பட்ட இத்தமிழ்க் குழுக்கள் முதலில் இந்தியாவின் தயவில் தங்கி நின்று சேவகம் செய்தனர் பின்னர் சிறிலங்காவின் நிழலில் தங்கினர். தற்பொழுது புதிய போக்கிடம் பற்றி சிந்திக்க முற்பட்டுள்ளனர். மக்கள் விரோத சக்திகளாக செயற்படும் சக்திகள் தேவைக்கேற்ப எஜமானர்களால் போசிக்கப்படுவதும், பின்னர் தேவை முடிந்து கைவிடப்பட்ட நிலையில் அவை அழிந்து போவதும் அரசியல் வரலாறு தந்துள்ள பாடம். இதற்கு கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களும் விதிவிலக்காக இருப்பது சாத்தியப்படப் போவதில்லை.

---

...மூவாயிரத்து ஐந்நூறு நீண்ட தூர ஏவாயுதக் குண்டுகளை மட்டும் வைத்திருக்க இணக்கம் கண்டனர். இது அமெரிக்கா கூறிய 4700 என்ற எண்ணிக்கையை விட மிகவும் குறைவானதாகும்.

ஒவ்வொரு தரப்பிடமும் தற்போது பத்தாயிரத்துக்கு மேற்பட்ட இத்தகைய ஆயுதங்கள் உள்ளன. புதிய ஒப்பந்தத்தின்படி இந்த எண்ணிக்கை மூன்றில் இரு பங்காகக் குறைக்கப்படும் இது குறித்து ரஷ்ய அமெரிக்க வெளிநாட்டமைச்சர்கள் கடந்த திங்கட்கிழமை ஆராய்ந்தனர்.

"அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்குமிடையே ஏற்பட்டுள்ள பொருளாதார அரசியல் மாற்றத்தை தற்போது ...ளின் விபரங்களை ரஷ்யா வெளியிடும் எனவும் ரஷ்யா அறிவித்துள்ளது.

# கொர்பசேவிற்கு இஸ்ரேல் விருது வழங்கியது

(ஹைபா)

மத்திய கிழக்கு அரசியலை புனரமைப்பு செய்ததற்காக முன்னாள் சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவிற்கு இஸ்ரேல் விருது அளித்துக் கௌரவித்துள்ளது.

35,000 டொலருடன், ஹார்வி சமாதானப் பரிசும் கொர்பச்சேவிற்கு வழங்கப்பட்ட விருதாகும். இவருக்கு இவ்விருதினை வழங்கிய டெக்னியன் என்ற தொழில் நுட்பக் கல்லூரி தனது அறிக்கையில்:

"இஸ்ரேல் அரபு நெருக்கடியின்போது மத்தியகிழக்கில் சமாதானத்தைஏற்படுத்தவும் பிராந்திய ஆயுதப் போட்டியைக் குறைக்கவும், வளைகுடா யுத்தத்தில் சோவியத் யூனியன் மேற்கொண்ட நிலைக்கும் பொறுப்பு வகித்த கொர்ச்சேவிற்கு இப்பரிசை அளிக்கத் தீர்மானித்திருக்கிறோம். கொர்பச்சேவ் தலைமையில் அவரது நாடு மத்திய கிழக்கு நெருக்கடியில் ஒரு சமமான கொள்கையைக் கடைப்பிடித்ததுடன் இஸ்ரேலும் ராஜீய உறவையும் ஏற்படுத்தியது'' என்று குறிப்பிட்டுள்ளது.

## சேர்பிய ஜனாதிபதியை

# பதவி விலகக்கோரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(பெல்கிரேட்)

சேர்பிய ஜனாதிபதி மிலோஸெவிக் ராஜினாமாச் செய்ய வேண்டும் எனக்கோரி பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர்

பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பெல்கிரேட் பல்கலைக்கழகத்தில் புகுந்து கொண்டுமிலோஸெவிக் ராஜினாமாச் செய்யும்வரை வெளியே வர மறுப்பு தெரிவித்து வருகிறார்கள். இவர்களுடன் 29 பல்கலைக்கழக பீடத் தலைவர்களும் சேர்ந்து இப்போராட்டத்தில் இறங்கியுள்ளனர்

சேர்பியா மீதான ஐ.நா தடையை எதிர்த்தும் பொஸ்னியா ஹெர்ஸகோவினா சண்டையை எதிர்த்தும் இந்நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் தேசிய மீட்சிக்கான அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகிறார்கள்.

பெல்கிரேட் பல்கலைக்கழகத்தில் மிலோஸெவிக் விலக வேண்டும் எனக் கோரும் மாணவர்களின் கோரிக்கையை பீடங்களின் சபை ஆதரிப்பதாக பல்கலைக்கழகத் தலைவர் ரஜ்கோ விராகாரிக் தெரிவித்தார்.

தற்போதைய தலைமை எம்மை உலகத்திலிருந்து ஒதுக்கியிருக்கிறது தவறான கண்மூடித்தனமான தங்கள் செயலினால் சேர்பியர்களானஎம்மை வெட்கத்துக்கு ஆளாக்கியுள்ளது. மீண்டும் பெருமைமிக்க சமூதாயமாக உருவெடுக்க எமக்கு புதிய தலைமை தேவையெனவும் அவர் தெரிவித்தார்.

மிலோஸெவிக்கு எதிராக மாணவர்கள், டாக்ஸி சாரதிகள், கல்விமான்கள், அறிவாளிகள், எதிர்க்கட்சிகள், நடிகர்கள், இசைக்கலைஞர்கள் ஆகியோரினதும் சேர்பிய வைதீக திருச்சபையினதும் கிளர்ச்சி சேர்பியாவில் ஒரு சிவில் யுத்தம் ஏற்படும் என்ற அச்சத்தைஏற்படுத்தியுள்ளது,

## உலக வங்கியில் ரஷ்யா

(மொஸ்கோ)

ரஷ்யக் குடியரசு உலக வங்கியின் அங்கத்தினராகச் சேர்ந்துள்ளது முன்னாள் சோவியத் குடியரசுகளில் ரஷ்யாவே முதலில் உலக வங்கியில் அங்கத்துவ நாடாகியுள்ளது.

## சங்கர் தயாள் சர்மா

(டில்லி)

குடியரசுத் தலைவர் பதவிக்கான தேர்தலில் இந்திராகாங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக டாக்டர் சங்கர்தயாள் சர்மா போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

...அய்யாத்துரை பத்திரிகைக்கு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது ஊவாப் பகுதியில் அடிக்கடி தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர் தொழிற்சங்கங்களின் தொழிற்சங்க போட்டி காரணமாகவும் தனிப்பட்ட வஞ்சகத்தை...

...வுக்கு வழிவகுத்துவிடும் இத்தகைய நிலைகளிலிருந்து மலையக இளம்சமுதாயத்தினரைப் பாதுகாக்க வேண்டும் இல்லையேல் எமதுசமூகத்தை அழிக்க செயல்படும் கும்பலுக்கு துணை போனதாக சரித்திரம் கூறும் எனவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தலைமன்னார் போக்குவரத்து ஆரம்பித்ததும்

# தோட்ட தொழிலாளர் இந்தியா அனுப்பப்படுவர்

(கொழும்பு)

தலைமன்னார் கப்பற்துறையில் போக்குவரத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதும் இந்தியா திரும்பவிருக்கும் இந்திய பாஸ்போட் பெற்ற இந்திய வம்சாவளித் தொழிலாளர்கள் அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றுசிறிலங்காப் பிரதமரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சராகிய டி. பி. விஜயதுங்கா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் இத் தகவலை தெரிவித்தார்.

# இடமாற்ற வேலைகள் 15க்குள் முடிக்க வேண்டும்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு இடமாற்றம் வழங்கும் வேலைகள் 15 தினங்களுக்குள் முடிக்கப்பட வேண்டுமென்று பொதுநிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சு சகல அமைச்சுக்கள் திணைக்களங்களிலுள்ள இடமாற்றச் சபைக்கு பணிப்புரை வழங்கியுள்ளது

எதிர்வரும் ஜூலை 15-ம் திகதிக்கு முன் ஊழியர்கள் இடமாற்றம் கோரி விண்ணப்பிக்க வேண்டும் இந்த விண்ணப்பங்கள் கிடைத்தவுடனே ஜூலை 30-ம் திகதிக்கு முன்னர் இடமாற்றங்களை ஒட்டவணைப்படுத்திபூர்த்தி செய்ய வேண்டும் பின்னர் ஆகஸ்ட் 31-ம் திகதிக்கு முன்னர் இடமாற்றம் பெறத் தகுதியுள்ள இடமாற்ற உத்தரவுகள் கிடைக்கும். இப்படிக்கிடைக்கும் உத்தரவுகளில் ஏதும் முரண்பாடு இருந்தால் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் செப்டம்பர் 30 வரை மேன்முறையீடு செய்யலாம் என அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த இடமாற்றங்கள் 1993 ஜனவரி முதலாம் திகதி முதல் செல்லுபடியாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

கொழும்பில் தனியார் பஸ் ஊழியர்கள் மேற்கொண்டு வந்த வேலை நிறுத்தம் நேற்று முன்தினம் முதல் கைவிடப்பட்டுள்ளது இதையடுத்துபஸ் சேவைகள் மீண்டும் சீராக்கம் அடைந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

ஈழநாதம்

# மனிதாபிமானமற்ற முறையில் அகதிகள் நடாத்தப்படுகின்றனர்

## கருணாநிதி கண்டனம்

(சென்னை)

தமிழகத்தில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளிற்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த அனைத்துச் சலுகைகளும் பறிக்கப்பட்டிருக்கிறது. இம் மக்கள் தற்பொது மனிதாபிமானமற்ற வகையில் நடாத்தப்பட்டு வருகின்றனர். இவ்வாறு திரு. கருணாநிதி கூறியிருக்கிறார்.

அகதிகளாக தமிழகத்தில் தங்கியிருக்கும் இம்மக்கள் தாமாகவே விரும்பி தாயகம் திரும்பிச் செல்லும் நிலை உருவாகும் வரை அனைத்து அகதிகளுக்கும் தேவையான சகல உதவிகளையும் மத்திய, மாநில அரசுகள் செய்ய வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

## சுவரொட்டிகள் ஒட்ட தமிழகத்தில் தடை

(சென்னை)

பொது மற்றும் தனியார் இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டுவதைத் தடைசெய்து தமிழ் நாடு ஆளுநர் அவசர சட்டம் ஒன்றைப் பிறப்பித்துள்ளார்.

சென்னை உள்ளிட்ட மாநகராட்சிப் பகுதியிலும் மற்றும் நகராட்சிப் பகுதியிலும் தடைச் சட்டம் செயற்படுத்தப்படும். இந்தத் தடை உத்தரவு சென்னை மாநகராட்சிப் பகுதியில் உடனடியாகவும், ஏனைய இடங்களில் அரசு அறிவிக்கும் நாளிலிருந்தும் அமுலுக்கு வரும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விசேட நிகழ்ச்சிகளின் போது சுவரொட்டிகளை முன்னனுமதி பெற்றுக் குறிப்பிட்ட இடங்களில் ஒட்டலாம்.

தமிழக அரசு இந்தச் சட்டத்தை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும். இது எதிர்க் கட்சிகளின் நடவடிக்கையை முழுமையாக அடக்குவதாகும் என்று இந்திய கம்யூனிஸ்ட் மாக்ஸிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கண்டித்துள்ளார்.

## 16 உறுப்பினர் தெரிவு

மத்திய பிரதேசம், ஒரிசா, தமிழ்நாடு, பஞ்சாப் ஆகியவற்றிலிருந்து பதினாறு உறுப்பினர்கள் போட்டி எதுவுமின்றி இந்திய ராஜ்யசபாவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்திய ராஜ்யசபாவில் வெற்றிடமாகவுள்ள ராஜஸ்தான் மாநிலத்தின் நான்கு இடங்களுக்காக ஆறு வேட்பாளர்களும் பீகார் மாநிலத்தின் ஏழு இடங்களுக்காக பதின்மூன்று வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர். இதற்கான தேர்தல் எதிர்வரும் செவ்வாயன்று நடைபெறவுள்ளது.

## திணைக்கள தலைவர்களின் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல திணைக்களத் தலைவருக்குமான கூட்டமொன்று எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்திற்கு திணைக்களத் தலைவர்கள் சகலரும் தவறாது கலந்துகொள்ளுமாறு மாவட்ட ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## சிறிலங்காவும் கைச்சாத்திடும்

(கொழும்பு)

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக சார்க்நாடுகளுக்கு இடையே ஏற்படுத்தப்படும் உடன்படிக்கையில் சிறிலங்காவும் கைச்சாத்திடவுள்ளது. இவ் அறிக்கை பாராளுமன்றத்திலும் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

## பட்டித்திடலில் புதிய இராணுவ முகாம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் மூதூர், பட்டித்திடல் என்னும் கிராமத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் புதிய முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்.

இது கடந்த ஒன்பதாம் திகதி அமைக்கப்பட்டது.

# அணுத் தொழில் நுட்பம் குறித்து இந்-அமெரிக்கா பேச்சுவார்த்தை

(டில்லி)

ஏவுகணை மற்றும் அணுத் தொழில் நுட்பம் குறித்து இந்திய, அமெரிக்க உயர் அதிகாரிகளுக்கிடையே புதுடில்லியில் உயர் மட்டப்பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவருகின்றன.

கடந்த இருநாட்களாக நடைபெற்று வரும் இப் பேச்சுக்களில் அணு ஆயுதப் பரவலைத் தடுப்பது சம்பந்தமாகவும் இருநாடுகளுக்கும் இடையில் நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடிய விடயங்கள் தொடர்பாகவும் பேசப்பட்டதாகக் கூறப்படுகின்றபோதிலும் பேச்சுவார்த்தைகளின் முழு விபரங்களும் வெளியிடப்படவில்லை.

இந்தியாவின் றொக்கட் மற்றும் ஏவுகணைத் திட்டங்களுக்கு அமெரிக்கா அண்மைக்காலமாக கண்டனம் தெரிவித்து வந்திருக்கிறது. இந்த நிலையில் இவ் விடயம் குறித்து இருநாடுகளும் பேசுவது முக்கியத்துவம் பெறுகிறது.

இவ் இரு நாடுகளுக்குமிடையே சிலவிடயங்களில் மாறுபாடான கருத்துக்கள் நிலவுகின்ற அதேவேளை அண்மைக்காலமாக இவ் இருநாடுகளுக்குமிடையே நட்புறவு வேகமாக வளர்ந்து வருகின்றது. இந்த நிலையிலேயே இப்பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியுள்ளன. அத்துடன் இருநாடுகளுக்குமிடையே பாதுகாப்பு விவகாரங்களில் கூட்டுறவு அதிகப்படுத்தப்படும் என்ற அறிவிப்பும் வெளியாகியிருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தென்னாசியப் பிராந்தியத்தை அணு ஆயுதங்கள் அற்ற பகுதியாக அறிவிக்க வேண்டுமென்ற பாகிஸ்தானின் திட்டத்தை அமெரிக்கா ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் இவ் விடயம் தொடர்பாக அமெரிக்காவுடன் மேலும் பேசவேண்டுமென்று இந்தியா விரும்புகிறது. அணு ஆயுதப் பரவலைத் தடுக்க வேண்டும் என்பதில் இந்தியாவுக்கு மாறுபாடான கருத்து எதுவும் இல்லை. எனினும் இவ்வாறான திட்டம் உலகளாவிய தாக இருக்கவேண்டும் என்றும் தனியே ஒரு பிராந்தியத்துக்கு மட்டும் பொருந்தக் கூடாது என்பது இந்தியாவின் தற்போதைய கருத்தாகும்.

## காங்கிரஸ் செயலுக்கு பாரதீய ஜனதா கண்டனம்

(டில்லி)

ஜனாதிபதித் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சி சங்கர்தயாள் சர்மாவை நியமித்திருப்பதையிட்டு பாரதீய ஜனதாக்கட்சி ஆத்திரமடைந்திருக்கிறது.

காங்கிரஸ்கட்சி தன்னிச்சையாகவே வேட்பாளரை நியமித்துவிட்டு எதிர்க்கட்சிகளின் ஆதரவை எதிர்பார்ப்பது நியாயமற்றது என பாரதீய ஜனதாக் கட்சி கருதுகிறது.

முன்பெல்லாம் எதிர்க் கட்சிகள் தாம் தோல்வி அடையும் நிலையிலும் வேட்பாளர்களை நிறுத்துவது வழக்கம். ஆனால் இப்பொழுது எதிர்க்கட்சிகள் பலமான நிலையில் இருக்கும்போது ஏன் வேட்பாளரை நிறுத்தக் கூடாது என்று பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல்.கே. அத்வானி கேள்வி எழுப்பியிருக்கிறார்.

## எதிர்க்கட்சிகளை பழிவாங்க தமிழ்நாடு அரசு நடவடிக்கை -திருநாவுக்கரசு

(சென்னை)

தமிழகத்தில் எதிர்க்கட்சிகளைப் பழிவாங்கும் விதத்திலான நடவடிக்கைகளில் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தினர் ஈடுபடுவதாக திரு.எஸ். திருநாவுக்கரசு குற்றம் சாட்டியிருக்கிறார்.

எதிர்க்கட்சியினரின் கூட்டங்களில குழப்பம் செய்தல், எதிர்க்கட்சிக்காரர்களுக்கெதிராக வழக்குத்தாக்கல் செய்தல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் இதன் மூலம் முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் நற்பெயர் எடுக்கவும் அதனூடாக தமது பதவிகளைக் காப்பாற்றவும் மேலும் பதவிகளை பெற்றுக்கொள்ளவும் முயற்சிக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

## பொதுமக்கள

அழைத்து பொதுமக்களிடமிருந்து கம்பி, இடுகு சீமெந்து, மின் விளக்கு, வயர் ஆகியவற்றை பெற்றுத்தருமாறு வற்புறுத்தியுள்ளார்.

இதனால் மக்கள் பயத்துடனும், பீதியுடனும் வாழ்ந்து வருகின்றனர்.

## பேர்

கொள்ளை இலாபம்பெற முனையும் சில வர்த்தகர்கள் மண்ணெண்ணெயினைப் பதுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றார்கள். இங்கு போதிய அளவு மண்ணெண்ணை கையிருப்பில் உள்ளது. எனவே மண்ணெண்ணைத் தட்டுப்பாட்டிற்குக் காரணம் எதுவும் இல்லை

எனவே இவ்வாறான பதுக்கல் மற்றும் கூடிய விலையில் விற்றல் நடவடிக்கைகள்பற்றி விழிப்புடன் இருக்குமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிறோம். பதுக்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் பற்றிய தகவல்களை அண்மையில் உள்ள காவல் பணிமனைகளில் வழங்கி ஒத்துழைக்குமாறு அவர் பொதுமக்களை

## மாணவர்

ஒரு கல்வி மாவட்டத்தில் 50 பாடசாலைகளில் 500 வகுப்புக்கள் இருந்தால் 500 மாணவர் தலைவர்கள் இம் மாநாட்டில் பங்குபற்றித் தேவையான கருத்துக்களை வழங்குவர். கல்வி அதிகாரிகள் இவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவர்.

### ராஜீவ் கொலையில்

# புலிகளுக்கு பாகிஸ்தான் உதவி இந்திய அமைச்சர் தெரிவிப்பு

(டில்லி)

ராஜீவ் காந்தி கொலைச்சம்பவத்தில் விடுதலைப் புலிகளுக்கு பாகிஸ்தான் உளவுப் பிரிவு உதவியிருக்கலாம் என்று இந்தியாவின் மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் கூறியிருக்கிறார்.

வெளிநாட்டுப் பத்திரிகை ஒன்றுக்கு அவர் வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு கூறியிருக்கிறார். ராஜீவ்காந்தி கொலை சம்பவத்தில் விடுதலைப்புலிகள் தனித்துச் செயற்பட்டிருப்பதற்குச் சந்தர்ப்பம் இல்லை என்றும் அவர்களுக்கு வேறு ஒரு சக்தியின் ஆதரவு இருந்திருக்கும் என்றும் அவர் தனது பேட்டியில் குறிப்பிட்டிருக்கிறார்.

## சண்முகத்தின் மைத்துனர் கடத்தப்பட்டார்

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு பின்னர் வேதாரணிய பொலிஸ் காவலில் இருந்த போது தற்கொலை செய்ததாகக் கூறப்படும் சண்முகத்தின் மைத்துனரை இனந்தெரி[illegible]

[illegible] சார் தெரிவித்துள்ளனர்.

சண்முகத்தின் மைத்துனரான வைத்தியநாதன் என்பவர் கொடிய காட்டில் உள்ள தனது இல்லத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்டதாக அவரது மனைவி புகார் செய்துள்ளதாகவும் அவர்கள் தெரி[illegible]

## தென்னைமர கள்ளிறக்குவதற்கான குத்தகை விளம்பரம்

கோம்பையன்மணல் மயானத்தில் இருக்கின்ற நாற்பத்திரண்டு (42) தென்னை மரங்களிலிருந்து 01-07-92 தொடக்கம் 31-06-93 வரையான காலப்பகுதியில் கள் இறக்குவதற்குத் தேவையானோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேற்படி விண்ணப்பதாரர்களின் கேள்வித்தொகை பன்னீராயிரத்திற்கு மேற்பட்டவர்களுக்கு அனுமதி வழங்கப்படும். கால எல்லை விண்ணப்பதாரரினால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதி 28-06-92 [illegible] மணிவரை

## விவசாய உதவி பணிப்பாளர் செய்திக்கு மறுப்பு

யூ. எஸ். எயிட் திட்டம் தோல்வியடைந்துள்ளது என யாழ். மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் தெரிவித்த செய்தி முற்றிலும் தவறான தகவல் என்று 'யெயர்' பிரதிப் பணிப்பாளர் மடபத்திரநதன் தெரிவித்துள்ளார்

இவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில்; யு.எஸ். எயிட் திட்டத்தின் வெற்றிகரமான செயற்பாடு பற்றி யாழ். அரசாங்க அதிபர் யெயர் தலைமை அலுவலகத்திற்கு தெரிவித்துள்ளார் என்றும் இதைபற்றி கடந்த மாதத்தில் திட்டத்தின் வெற்றி பற்றி தலைமையலுவலகத்தினால் பாராட்டு தெரிவிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## சிறைக்காவலர் பகிஷ்கரிப்பு நீதிமன்ற நடவடிக்கை பாதிப்பு

(கொழும்பு)

மாஜிஸ்திரேட் நீதிமன்ற நட[illegible]

விண்ணப்பதாரரினால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

விண்ணப்ப முடிவுதிகதி 28-06-92, 2மணிவரை.

நிர்வாக கட்டளைப்படி

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி; செயலாளர்

செயலாளர்; நா. சின்னத்துரை,
2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

(2703)

---

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## ஆதனவரி அறிவித்தல்

1992 ஆம் ஆண்டு 2 ஆம் கந்தாயத்துக்கான ஆதன வரியை 30-06-92 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு முன்னதாக எவ்வித தண்டமும் இன்றி அலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்துக்கு மேலதிகமாகக் கீழ்வரும் விபரப்படி வெலியாத்துப்பணம் அறவிடப்படும் எனவும், 3 ஆம், 4 ஆம் கந்தாயங்களுக்கான வரியை அக்கந்தாயங்களின் முதல் மாதத்துக்குள் 5 வீத வரிக்கழிவுடன் செலுத்தலாமெனவும் இத்தால் அறியத்தருகிறேன்.

| | |
|---|---|
| வெற்றுக் காணிகள்<br>குடியிருப்புக் காணிகள் | 15 வீதம் |

இவையல்லாத காணிகளுக்கு 20 வீதம்

காசோலைகளை, காசுக்கட்டளைகளை, அஞ்சல் கட்டளைகளை ''யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளரின்'' சார்பில் அஞ்சல் சேவையில் அனுப்பும்போது அஞ்சல் சேவையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு முன்கூட்டியே அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பும்போது வரியிறுப்பாளர்கள் ஆதனங்களின் வரிமதிப்பு இலக்கம், வீதியின் பெயர், வட்டார இலக்கம் ஆகிய விபரங்களையும் தயவுசெய்து இணைக்குக

மாநகராட்சிமன்ற அலுவலகம், யாழ்ப்பாணம், 18-06-1992.

வே.பொ. பாலசிங்கம், மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

(சி-4578)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

தாகக் கூறப்படும் சண்முகத்தின் மைத்துனரை இனந்தெரியாதோர் கடத்திச் சென்றுள்ளனர் என தமிழக பொலி

...திச் செல்லப்பட்டதாக அவரது மனைவி புகார் செய்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# சிறைச்சாலை அதிகாரிகள் அரசியற்கைதிகள்மீது தாக்கு

(சென்னை)

சேலம் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் சிறைச்சாலை அதிகாரிகளால் தாக்கப்பட்டனர்

குடிதண்ணீர் இல்லையென்றும், அதை சரியாக வழங்கப்படவில்லை என்றும் ஆட்சே பம் தெரிவித்தபோதே தாக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்திய கம்யூனிஸ்ட் மார்க்ஸிஸ்ட் கட்சியினர் மாநிலச் செயலாளர் ஏ நல்லசிவன் சென்னையில் வெளியிட்ட அறிக்கையொன்றில் கைதிகள் மீது தடியடி நடத்திய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்என்று அரசைக்கேட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட அரசியல்கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் தமிழக அரசைக் கோரியுள்ளார்.

---

### வட-கிழக்கிற் ந

ஆனால் இணைப்பு என்ற வார்த்தையே புதியதிட்டத்தில் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை புதிய திட்டத்தை நிராகரிக்கப் போவதாக தமிழ்க் குழுக்கள் அறிவித்துள்ளன வடக்கு, கிழக்கு இணைப்பு இல்லாத எந்தத் திட்டத்தையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பதில் எல்லாத் தமிழ்க் குழுக்களுக்கும் இடையே இணக்கம் காணப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

---

### ஆறு பேருக்கு

தப்பட்டுள்ளன. இதில் முதல் குற்றச்சாட்டு, சதிசெய்த குற்றச்சாட்டு ஆறு பேருக்கும் பொதுவானது ஏனைய ஆறு குற்றச் சாட்டுகளும் தகவல் கொடுக்கத் தவறியதாக ஒவ்வொருதர் மீதும் தனித்தனியே சுமத்தப்பட்டுள்ளது.

---

### பவள்

வெடி வெடித்ததாகவும் கூறப்பட்டு உள்ளது.

கடந்த வாரமும் பின்னுதைப்பற்றபீரங்கி பொருத்தப்பட்ட இராணுவத்தின் ஜீப் வண்டியொன்று இப்பகுதியில் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி சேதமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

---

### பாடசாலை

வைத்தியசாலையில் இராணுவத்தினரும், ரெலோ தேசத் துரோகிகளும் சேர்ந்து முகாம் அமைத்துள்ளனர். இதனால் தும்பங்கேணி திக்கோடை, காந்திபுரம், 39 ஆம் கிராமம், 38 ஆம் கிராமம், 40 ஆம் கிராமம், விவேகானந்தபுரம் ஆகிய கிராமங்களிலிருக்கும் மக்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

---

### மண்ணெய்

கையில் யாழ் மாவட்டத்தில் போதியளவு மண்ணெய் கையிருப்பில் உண்டு ஆனால் சில வர்த்தகர்கள் இன்றைய போராட்ட சூழ்நிலைகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி கொள்ளை இலாபமீட்ட முற்படுகின்றனர்.

இவ் வர்த்தகர்களின் திட்டமிட்ட செயற்கை முறையான மண்ணெய்த் தட்டுப்பாட்டை முறியடிக்கவே போதியளவு மண்ணெயை உடனடியாக இங்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளதாகக் கூறினார். (ச)

---

யில் உள்ள காவல் பணிமனைகளில் வழங்கி ஒத்துழைக்குமாறு அவர் பொதுமக்களை வேண்டியுள்ளார்.

இன்றைய போர்க்காலச் சூழ்நிலையில் இந்த நடவடிக்கை ஒரு பாரிய குற்றமாகவே கருதப்படும். இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இக் குற்றச் செயலைப் புரிந்தோருக்குக் கடும் அபராதம்விதிக்கப்படுவதுடன் அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குத் தடுத்தும் வைக்கப்படுவார்கள் என அவர் எச்சரித்துள்ளார்''

---

### அரசிடம்

மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்; யாழ். மாவட்டத்தில் மக்கள் குடியிருப்புகள் மீது சிறிலங்கா இராணுவமும் விமானப்படைகளும் கண்மூடித்தனமாகத் தாக்குதல்களை மேற்கொள்ளும் ஒவ்வொரு தடவையும் அவற்றை உடனடியாக நிறுத்தும்படி நேரடியாகவும் வானொலிமூலமும் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கு தகவல் கொடுத்துள்ளேன் கொழும்பு செல்லும் சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நேரடியாகச் சந்தித்து இத்தாக்குதல்களால் ஏற்படுகின்ற பாரதூரமான விளைவுகளைப் பலதடவைகள் எடுத்துக்காட்டியுள்ளேன். இவ்வாறு தாக்குவதால் பல அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்படுவதும், சொத்துக்கள் நாசமாக்கப்படுவதும் அவர்கள் அனைவருக்கும் நன்கு தெரிந்த விடயமே அப்படியிருந்தும் அவர்கள் திட்டமிட்டு குடியிருப்புக்கள் மீதுதாக்குதல் நடத்தும்போது அவற்றை நிறுத்துமாறு நான் வேண்டுகோள் விடுவதால் இனியும் பலனேதும் ஏற்படப் போவது இல்லை என மிகவும் வேதனையுடன் கூறினார். (ச)

---

## நீதிமன்ற நடவடிக்கை பாதிப்பு

(கொழும்பு)

சிறைக்காவலர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதைபடுத்து நீதிமன்ற நடவடிக்கைகள் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்துள்ளது. சிறைக் காவலர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டதை ஆட்சேபித்துசிறை அதிகாரிகள் பகிஷ்கரிப்பிலஈடுபட்டதால் மாலிகாகந்த மாஜிஸ்திரேட் நீதிமன்ற நடவடிக்கைகள் பாதிப்புக்கு உள்ளானது.

---

### போர்க்கால

இந்த அறிக்கை யாழ். பிராந்தியம் முழுவதும் கிராமம் கிராமமாக ஒலிபெருக்கி மூலம் தமிழ் மக்களுக்கு தெரியப்படுத்தப் பட்டுவருகிறது.

---

### வர்த்தக

அவப் பெயர் ஏற்படுவதற்கு வழிவகுக்கின்றது என்றும், மக்களின் தேவையை உணர்ந்து சேவையாற்றும் படியும் நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

---

## அமெ. பயணம

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த களுத்துறை மாவட்ட எம்பியும் ஹெல உறுமய குழுவின் முக்கியஸ்தர்களில் ஒருவருமான திலக் கருணாரத்ன அமெரிக்கா பயணமாகவுள்ளார் ஜூன் 16 ஆம திகதியன்று கொழும்பிலிருந்து சிங்கப்பூர் புறப்பட்ட அவர் அங்கிருந்து அமெரிக்காவிற்கும் சென்று வர இருக்கின்றார் என்று தெரிய வருகின்றது.

---

### சப்ரகமுவ

வது அரசியலமைப்பு] பிரகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களும் இன்று படிப்படியாக பறிக்கப்படுகின்றன எனவும் தெரிவித்தார்.

---

## வாகன வரிசை இலக்கம்

## 19-06-1992

சோதனைச் சாவடியில் இறுதியாகப் பதியப்பட்ட வாகன வரிசை இலக்கம்:-4455

சோதனை நிலையத்தைத் தாண்டிச்சென்ற இறுதி வாகன வரிசை இலக்கம்:-3675

இராணுவம் அனுமதித்த இறுதி வாகன வரிசை இலக்கம்:-3635

வடபகுதிக்கு வெளியே செல்ல இராணுவம் அனுமதித்த வாகன இலக்கம்:-

26-6743, 26-6075, 26-5760, 24-336, 27-2007, 26-763, 27-8503, 24 922, 24-6533, 24-192, 24-3906, 25-568, 36-9010 36-5620 25-6900, 25-5140, 24-6336, 28-3289 24-3003, 42-3924 28-9634, 22-3611, 40-3073, 41-5947, 26-4072, 26-5143 25-8313, 37-1496, 25-6941.

வடபகுதிக்கு உள்ளே செல்ல அனுமதித்த வாகன இலக்கம்:-

37-1485 37-2035, 36-5045, 36-3946 37-1302 25-9631, 25-5741, 22-7011, 36-3438, 36 914 27-5058, 42 8316 28-4367, 28-9327 28 3303, 41-3931, 27-5682, 40-7541, 26 9138, 70-7579, 70-9253.